# காங்கிரஸ் ஆட்சியின் பொருளாதார ஊழல்கள்!

REGD. No. M. 6311 PHONE No. 55630

# நம் நாடு

தி.மு.க. தின இதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா — இலங்கையில் 10 சதம்

சென்னை: ஆவணி 26உ சனி (11—9—54) — வெளியூர்: ஆவணி 27உ ஞாயிறு (12—9—54)

மலர்: 2 இதழ்: 77

## தேவையின்றி மான்யம் கேட்டனர்!

## சிற்றுண்டிச்சாலை நடத்தி ரூ. ஒன்றரை லட்சம் பாழ்!

## அரிசி வாங்கியதில் ரூ. 36 லட்சம் பாழ்!

### தணிக்கை அறிக்கை சுட்டிக்காட்டும் குறைபாடுகள்

### திறமையற்ற வரவு-செலவு திட்டம் தீட்டுகிறார்கள்

### செலவினங்களில் கண்காணிப்பு இல்லை

### டில்லி சர்க்கார் வரிப் பணத்தை வீண் செலவு செய்கின்ற போக்கு!

★

மக்களின் வரிப்பணத்தைப் பாழாக்குவதில் டில்லி ஆட்சி பீடத்திலுள்ள காங்கிரஸ் சர்க்காரை மிஞ்சுவோர், உலகில் எங்குமே இருக்க முடியாது என்பதற்கும் பல உதாரணங்கள் கிடைத்தவண்ணம் உள்ளன. ஆண்டுதோறும் இந்திய சர்க்காரின் ஆடிட்டர்-ஜெனரல் இலாகா வெளியிடும் அறிக்கைகள் இந்திய சர்க்காரின் திறமையற்ற போக்கையும், உள்நாட்டு செலவுகளிலும், வெளிநாட்டு வாணிபம், தூதுவராலயங்கள் மூலமும் பொதுமக்களின் பணம் கோடிக்கணக்கில் வீண் விரயமாவதுபற்றி, எடுத்துக்காட்டிக் கண்டித்து வருகின்றன.

எவ்வளவுதான் குறைபாடுகளை எடுத்துக்காட்டினபோதும், காங்கிரஸ் ஆட்சியினர் திருந்துவதாகக் காணோம். ஆனால், தொடர்ந்து மேலும் மேலும் ஊழல்கள் அதிகரித்துக்கொண்டே போகின்றன.

மக்கள் சபையில், விவாதத்திற்கு வைக்கப்பட்ட 1952-ம் ஆண்டு தணிக்கை அறிக்கையின் இரண்டாவது பகுதி, மேலும் பல பொருளாதார ஊழல்களை எடுத்துக்காட்டியிருக்கிறது.

1950—51-ம் ஆண்டில், காங்கிரஸ் சர்க்கார் பாராளுமன்றத்தில் அனுமதி பெற்ற 94 உப மான்யக் கோரிக்கைகளில் 23 தேவையற்றன என்பது குறிப்பிடப்பட்டிருக்கிறது. உப மான்யக் கோரிக்கை அளவின் பத்து சதவீதம் அவசியமில்லாதது என்று தணிக்கை அறிக்கை குறிப்பிடுகிறது.

பாராளுமன்றத்தில் அனுமதிக்கப்பட்ட 106 கோரிக்கைகளில் 92 இனங்களில் பணம் மீதமாயிற்று என்று தெரிகிறது.

தேவையற்ற, அனாவசியமான மான்யங்களைக் கேட்பது அதிகரித்திருப்பதும், சேமிப்பை சரண் அடையச் செய்வதில் காணப்படுகிற குறைபாடுகளும், ஆட்சியிலிருப்போரிடையே சரியான வரவு-செலவுத் திட்டத்தைத் தயாரிப்பதில் திறமையற்ற போக்கும், செலவினங்களைக் கண்காணிப்பதில் போதுமான கண்டிப்பு இல்லை என்பதையுமே காட்டுகின்றன.

60 பேர்கூட இல்லாத வெளிநாட்டு தூதுவராலயம் ஒன்றில் உள்ளவர்களுக்காக நடத்தப்பட்ட 'காண்டீன்' ஒன்றில் ரூ. 1,40,519 வீண் செலவு ஆகியிருக்கிறது என்பதைக் காட்டுகிறது என்று தணிக்கை அறிக்கை கூறுவதுடன், காண்டீன் நடத்துவதற்கு வாடகையோ, மின்சார செலவுகள், தேய்மானம் இவை ஏதும் இல்லாதபோதே இந்த நிலை என்பதையும். இந்த காண்டீன், உள்ளூர் நிலைமைகள், பொருளாதார அம்சங்கள் இவைகளைக் கவனியாது நடத்தப்பட்டதால் இந்த செலவு பூராவும் பயனற்றதாகப் போயிற்று என்பதைத் தணிக்கை அறிக்கை குறிப்பிடுகிறது.

அறிக்கையில் சுட்டிக்காட்டப்பட்டிருக்கும் மற்றோர் குறைபாடு அனைவரையும் திகைக்கச் செய்யும் தன்மை பெற்றதாகும்.

நேபாளத்திலிருந்து அரிசி வாங்கிய வகையில் இந்திய சர்க்காருக்கு 1945—46-ல் ரூ 36,62,717 நஷ்டம் ஏற்பட்டதாம். இந்த நஷ்டத்திற்கு யார் காரணம் என்பதை குறிப்பிட்டு தனி ஒரு நபரின் மீது நிச்சயமாக்க இயலவில்லை என்று அறிக்கை தெரிவிக்கிறது.

இதுபோல் பிரிட்டனில் இந்திய சர்க்காரின் முன்னாள் சிப்பந்திகளுக்குக் கொடுக்கப்பட்ட பென்ஷன் தொகைமீது வருமான வரி வசூலிக்கப்படவில்லையென்றும் அந்த அறிக்கை தெரிவிக்கிறது.

## நாட்டை உருவாக்கிய நல்லவரை அவமதிக்கிறார்கள்!

### பீகம் லியாகத் அலிகான் குற்றச்சாட்டு

### மூன்று ஆண்டுகளாகியும் படுகொலை பற்றி ஏதும் தெரியவில்லையே என வருத்தம்

கராச்சி, செப். 10—

"மூன்றாண்டுகளுக்கு முன்னர் நடைபெற்ற எனது கணவரின் கொலை பற்றி விவரங்கள் ஏதும் கிடைக்கவில்லை என்பது என் இதயத்திற்கு ஒரு பெரும் பாரமாக இருக்கிறது," என்று, பீகம் லியாகத் அலிகான் கூறியுள்ளார்.

வானொலியிலும், பத்திரிகையிலும், மாணவர்களுக்கென்று அச்சிடப்படும் புத்தகங்களிலும் தன் கணவனுக்குப் போதுமான கௌரவம் அளிக்கப்படவில்லை என்றும், மக்கள் தன் கணவருக்கு அளித்த 'குவாய்தே மில்லத்' போன்ற கௌரவப் பட்டங்களை வானொலியிலும், பத்திரிகைகளிலும் உபயோகிப்பதில்லை என்றும் கூறியிருக்கிறார்.

பாகிஸ்தானை உருவாக்கிய தன் கணவருக்கு அநீதி இழைக்கப்படுகிறது என்று பீகம் லியாகத் அலி மேலும் கூறியிருக்கிறார்.

பீகம் லியாகத் அலிகான் நெதர்லாந்துக்கு பாகிஸ்தானின் தூதுவராக நியமிக்கப்பட்டிருக்கிறார் என்பது நினைவில் இருக்கலாம்.

### போர் வருமென்று அச்சுறுத்தல்

### கோவா அதிகாரிகள் செயல்!

பம்பாய், செப். 10—

போர்த்துகீசிய அதிகாரிகள் கோவாவில், போர்த்துகீசிய அருப்புக்களை 'ஜம்மமாக' நடமாட விட்டுவிட்டு, கோவா மக்களிடையே தங்களைச் சுற்றிலும் யுத்த 'மூண்டிபு' கடக்கிறது என்ற 'பீதி'யைக் கிளப்ப முயற்சிக்கிறார்களாம்.

★

### இந்தியரின் கண்டனக் குறிப்பு

கோவாவில் உள்ள போர்த்துகீசிய காலனி ஆதிக்கத்தை எதிர்த்து அறப்போர் புரிந்ததாகக் கைது செய்யப்பட்டுள்ள திரு கோமாவை, இந்திய அதிகாரிகள் சிறையில் பார்க்க கோவா அதிகாரிகள் மறுத்துவிட்டதை ஒட்டி போர்த்துகீசிய அரசாங்கத்திற்கு இந்திய அரசாங்கம், ஆட்சேபக் குறிப்பொன்றைத் தந்துள்ளதாகத் தெரிகிறது.

### அணுகுண்டு பரிசோதனை

### மீண்டும் நடைபெறும்

அமெரிக்கா அறிவிப்பு

வாஷிங்டன், செப் 9—

அமெரிக்க அணுசக்திக் கமிஷனின் தலைவரான லூயிஸ் ஸ்ட்ராஸ் அடுத்த ஆண்டில் அமெரிக்கா பசிபிக்கில் மீண்டும் அணுசக்திக் கருவிகளைப் பரிசோதனை செய்யுமென்று கூறியுள்ளார்.

சென்ற ஆண்டு பரிசோதனை நடைபெற்ற இடத்திலேயேதான் பரிசோதனை நடைபெறுமாம்.

### பசுவதைத் தடுப்பு ஆர்ப்பாட்டம்

ஒருவர் மரணம்; 86 பேர் கைது

கல்கத்தா, செப். 10—

சட்டசபைக்கு அருகில் கூடி சுமார் 5000 பேர் பசுவதை எதிர்ப்பு ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

இந்த ஆர்ப்பாட்டக்காரர் மீது போலீசார் கண்ணீர்ப்புகை பிரயோகமும், தடியடிப் பிரயோகமும் செய்தனர்.

இதனால் போலீசாருக்கும், ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே கைகலப்பு ஏற்பட்டு, ஒருவர் கொல்லப்பட்டதாயும், பலர் காயமடைந்ததாயும் தெரிகிறது.

இதுவரை சுமார் 86 பேர்கள் கைது செய்யப்பட்டிருக்கின்றனர்.

இந்த ஆர்ப்பாட்டக்காரர்களில் சிலர் சட்ட சபைக்குள்ளேயே நுழைய முயற்சித்தனராம்.

### டாக்டர் விசாலாட்சி-நெடுஞ்செழியன் சென்னை வருகை

சென்னை, செப். 11—

டாக்டர் விசாலாட்சி-நெடுஞ்செழியன் M.B.B.S., M.P.H., D.M.C.H., அவர்கள் நேற்று இரவு 2 மணிக்கு ஏர் இந்தியா இன்டர் நேஷனல் விமானம் மூலம் சென்னை மீனம்பாக்கம் விமானக் கூடத்தில் வந்திறங்கினார்கள்.

நேற்று இரவு 9-15 மணிக்கு வந்து சேரவேண்டிய விமானம் வானிலைக் கோளாறுகளின் காரணமாக இரவு 2 மணிக்குத்தான் வந்து சேர்ந்தது.

டாக்டர் விசாலாட்சி-நெடுஞ்செழியன் அவர்களோடு டாக்டர் ஜானகி-சுப்பிரமணியம், டாக்டர் பி. ஜி. கேசவலு, இன்ஜினியர் இராஜகோபால் ஆகியோரும் வந்து சேர்ந்தனர். இந்நால்வரும் ட்ருமென் நான்கு அம்சத் திட்டத்தின் கீழ் அமெரிக்கா சென்று, அமெரிக்க அரசாங்கத்தின் செலவில் சென்ற ஓராண்டு காலமாகக் கல்வி பயின்று பட்டம் பெற்றுத் திரும்பியவர்களாவார்கள்.

டாக்டர் விசாலாட்சி-நெடுஞ்செழியன் அவர்கள் விமானப் பிரயாணம் சுகமாகவே இருந்தது என்றும், வெளிநாடுகளில் தாம் கண்ட காட்சிகளுக்கும், இந்தியாவில் தாம் காணும் காட்சிகளுக்கும் நிரம்ப வேறுபாடுகள் இருக்கின்றன என்றும், இந்திய மக்கள் அமெரிக்க மக்களைப் போன்று வாழ்க்கைத் தரத்தில் முன்னேற பலரும் பல துறையிலும் உழைக்க வேண்டியிருக்கும் என்றும், பல காலம் பிடிக்கும் என்றும் குறிப்பிட்டார்கள்.

டாக்டர் விசாலாட்சி-நெடுஞ்செழியன் அவர்களை வரவேற்க ஏராளமான கழகத் தோழர்கள் விமானக் கூடத்தில் கூடியிருந்தனர். மலர் மாலைகளும், ஜரிகை மாலைகளும் பலராலும் அணிவிக்கப்பட்டு, மிக்க குதூகலத்துடன் வரவேற்கப்பட்டார்கள்.

டாக்டர் அவர்களை வரவேற்க விமானக் கூடத்திற்கு வந்திருந்தவர்களில் முக்கியமானவர்கள்:— தோழர்கள் சி. என். அண்ணாதுரை, இரா. நெடுஞ்செழியன், டபிள்யூ கே. தேவராசன், என். எஸ். பி. லிங்கம், சி. வி. இராஜகோபால், அ. பொன்னம்பலனார், நா. ஆவுடையப்பன், இரா. செழியன், இரா. இராமதாஸ், குழந்தைவேலன், மேஜர் திருச்சிற்றம்பலம், வை. திருநாவுக்கரசு, தியாகராசன், இராமானுஜம், எம். பி. கந்தசாமி, எம். எஸ். பிஞ்ஞாயாணி, 'தமிழ் முரசு' சீனிவாசன், எம். எஸ். முத்து, வி. எம். ஜான், ஆகியோரும், தோழியர்கள் மீனாட்சி சுந்தரத்தம்மையார், நாடியம்மாள்-ஆவுடையப்பன், புனிதவல்லி-தியாகராசன், விமலா, நீலா, விசாலம்-இராமசாமி, மீனாட்சி-திருச்சிற்றம்பலம் ஆகியோர் ஆவார்கள்.

டாக்டர் அவர்கள் இரண்டு மூன்று நாட்கள் சென்னையில் தங்கிவிட்டுத் தஞ்சை சேலம் செல்லுவார்கள் என்று தெரிய வருகிறது. (ந-நி)

# நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 11—9—54 சனி


# சில அமைச்சர் சீமான்கள்!

"என்ன இருந்தாலும், உனக்கு, இப்படி வரக் கூடாது; எப்படித்தான் இந்த வேதனையைப் பொறுத்துக்கொள்கிறாயோ! கஷ்டம் என்று வந்துவிட்டால், என்ன செய்வது? எப்படியோ சமாளிக்க வேண்டியது தான்; கவலைப்படாதே, நான் இருக்கிறேன்; ஏதோ, என்னால் ஆனதைச் செய்கிறேன்; இப்படி சோர்ந்து விடாதே என்பதற்காக, யாருக்கும் அடிபணிந்து விடாதே; உயிரே போவதென்றாலும், ஒரு கை பார்த்துவிடலாம்; அந்த விஷயத்தில் மட்டும் விட்டுக் கொடுக்காதே!"

குடும்பச் சச்சரவு காரணமாகவோ, அல்லது உறவினர் ஒருவரின் மரணம் பற்றியோ கவலைப்படும் மனிதனை, தேற்றுவதுபோல் தேற்றி, தூண்டிவிட்டு வேடிக்கை பார்த்து, கிடைத்ததைச் சுருட்டும் இப்படிப்பட்ட நபர்களைக் கண்டிருக்கலாம்!

"உனக்குக் கலியாணம் ஏற்பாடாகிவிட்டதாமே; எனக்குச் சொல்லக்கூடாதா? முகூர்த்தம் எப்போது? சிறப்பாகச் செய்யப்பா; உன் குடும்ப அந்தஸ்திற்குக் குறைவேற்படும்படி நடந்துகொள்ளாதே! வாழ்க்கையில் கிடைக்கும் ஒரே ஒரு சம்பவம்! பணம் செலவாகுமே—அதற்கு எங்கே போவதென்று யோசிக்கிறாயா? கவலைப்படாதே; உன் அப்பாவும், நானும், எந்த அளவு நண்பர்களாக இருந்தோம் தெரியுமா? அவர்தான் போய்விட்டாரே; பணம் நான் தருகிறேன்; உன் வீட்டை என் பெயருக்கு எழுதிக்கொடு; வித்தியாசமாக நினைக்காதே—ஒரு 'பிடிப்பு' இருக்க வேண்டுமென்பதற்காகத்தான் கேட்கிறேன்."

நீண்டகாலமாக, பக்கத்து வீட்டை அபகரித்துவிட வேண்டுமென்று திட்டமிட்டு, இவ்வாறு பேசி பணம் தந்து, பின்னர், வீட்டையே குறைந்த விலைக்கு வாங்கும் குதுமதியினரையும் பார்த்திருக்கலாம்!

அன்பாகப் பேசுவார்கள்; பண்பாக நடந்துகொள்வார்கள்; உள்நோக்கமெல்லாம், 'உலகம் தன்னை மதிக்கவேண்டும், ஊராரின் சுகத்தைக் கொள்ளையடிக்க வேண்டும்,' என்பதாகவே இருக்கும்; சமுதாயத்தில், இப்படிப்பட்ட சுயநலவாதிகள் நடமாடுவதை நாட்டு மக்கள் பார்த்திருக்கிறார்கள்!

இதே நிலை, அரசியல் ஆதிக்க மனப்பான்மை கொண்டோரிடமும் காணப்படும்.

மாற்று நாட்டு மக்களின் மீது நாட்டம் கொண்டு, நல்லவர்கள்போல் நடித்து, பின்னர், அந்த நாட்டு அதிகாரத்தைக் கைப்பற்றுவார்கள்—ஆதிக்க மனப்பான்மைகொண்டவர்கள்!

அமெரிக்கா, இதுபோன்ற எண்ணம் கொண்ட நாடு என்ற நிலை, நாளுக்குநாள் உறுதியாகிக்கொண்டு வருகிறது!

'சுதந்திரம்' என்ற சொல்லுக்கும், 'ஜனநாயகம்' என்ற அமைப்புக்கும் நல்ல விளக்கம் தந்து, சுதந்திர தேவியின் சிலையை அமைத்த நாடு, இன்று, ஆதிக்க வெறி பிடித்து அலைகிறது!

தனது நாட்டிலே உற்பத்தியாகும் போர்க் கருவிகள் விலை போக, உலகின் எந்த மூலையிலாவது போர் நடந்துகொண்டே இருக்க வேண்டும் என்று விரும்புகிறது!

உலக வரலாற்றில், விடுதலைப் போராட்டங்கள் நிறைந்து காணப்படும் பகுதி, இருபதாம் நூற்றாண்டின் முதற் பகுதி!

குறிப்பாக, கடந்த ஐம்பது ஆண்டுகளிலே, ஆசிய நாடுகள், காலனி ஆதிக்கத்தை எதிர்த்து, விடுதலை பெற்று வருகின்றன!

விடுதலை பெற்ற நாடுகள், தங்கள் முன்னேற்றத்திற்கென அடுத்த நாட்டினர் உதவியைப் பெறும் நிலையில் உள்ளதை, அமெரிக்கா தனக்குச் சாதகமாகப் பயன்படுத்த முனைகிறது!

'நேட்டோ' என்று அழைக்கப்படும் வட அட்லாண்டிக் நாடுகள் என்பதன் பெயரில், அமெரிக்கா, ஐரோப்பிய நாடுகளைத் தன் வலையில் சிக்க வைத்து இருக்கிறது!

'மேட்டோ' என்று கூறப்படும் மத்திய கிழக்கும் பாதுகாப்பு ஒப்பந்தம் என்ற பெயரில், எகிப்து, துருக்கி போன்ற முஸ்லீம் நாடுகளைத் தன் வலையில் சிக்கத் திட்டமிட்டு, அமெரிக்க ஏகாதிபத்தியம் முயற்சிக்கிறது!

இவற்றிற்கெல்லாம் அமெரிக்கா, 'உலக சமாதானம்' என்ற பல்லவியைப் பாடுகிறது!

'கம்யூனிச எதிர்ப்பு' என்று பேசி, 'ரஷ்யாவின் ஆதிக்கத்தைத் தடுக்கிறேன்,' என்று போலி வேடம் போட்டு, பல நாடுகளில், தனது காட்டுமிராண்டிக் கொள்கையை அமுல் நடத்துகிறது!

ஆசியாவில் தனது ஆதிக்கத்தை நீடிக்க, அமெரிக்கா, நீண்ட காலமாகவே முனைந்து வந்திருக்கிறது! ஆசிய நாடுகளின் அதிபர்கள் பலருக்கு, தனது வெள்ளை மாளிகையில் விருந்து அளித்திருக்கிறது!

இந்தியாவில் பஞ்சமா—'பயப்பட வேண்டாம்; கோதுமையைக் கடனாக அனுப்புகிறேன்' என்று அனுப்புவது!

'திட்டங்களை நிறைவேற்றப் பணம் இல்லையே; இப்படி வேருமென்று தெரிந்துதானே நாங்கள், 'நான்கு அம்சத் திட்டம்' என்று ஒரு உதவித் திட்டத்தை உருவாக்கியிருக்கிறோம்,' என்பது—தந்தது!

'அணை கட்ட ஆள் இல்லையே என்று வருந்த வேண்டாம்; அவசியமானால், 100 நிபுணர்களை அனுப்புகிறோம்; வேலை முடிந்தவுடன் அனுப்பிவிடுங்கள்,' போதும் என்பது!

இலங்கையின் தேயிலைச் செடிகளுக்குப் புதிதாக நோய் ஏதாவது ஏற்பட்டது என்றால்—அந்த நோய், அமெரிக்கப் பகுதியான கலிபோர்னியா காடுகளின் வந்துவிட்டது போன்றே—அமெரிக்கா நடிக்கும்; நோயைப் போக்க ஆவன செய்யும்!

கப்பல் கட்டித் தரும்; ரயில் எஞ்சின்களைச் செய்ய ஒப்பந்தம் செய்துகொள்ளும்!

'ரப்பரையும், மிளகையும் நான் மட்டும் வாங்கிக்கொள்ளுகிறேன்; கம்யூனிஸ்டு நாடுகளுக்குக் கொடுக்காதீர்கள்; அவை, உங்களின் குரல்வளையை நெறிக்கச் சமயம் பார்த்துக் கொண்டிருக்கின்றன,' என்று எச்சரிக்கும்!

டாலர் உதவியின் பின்னே வரும் ஆபத்துக்கள் என்ன என்பதை நாம் அடிக்கடி எடுத்துக்காட்டியிருக்கிறோம்.

ஆசியாவில், தன்னுடைய போக்கு பலிக்காது என்ற உண்மையை அமெரிக்கா உணர்ந்து கொண்டது!

ஜினிவா மாநாடுகளில் தோற்றுப்போய்த்தலைகவிழ்ந்து சென்றது!

அந்த மாநாடுகள் முடிந்து இன்னும் ஆறு மாதங்கள் கூட ஆகவில்லை; சென்ற சில தினங்களுக்குமுன், அந்த மாநாட்டின் முடிவுகளுக்கு அமெரிக்கா, உலை வைத்து விட்டது!

மணிலாவில் கையெழுத்தாகி யிருக்கும் 'சீட்டோ' ஒப்பந்தம், ஜினிவா சமாதான ஒப்பந்தத்திற்கு வைக்கப்பட்ட தீயாகும்!

தென் கிழக்கு ஆசியாவைப் பாதுகாப்பதில், தென் கிழக்கு ஆசியா நாடுகள் அல்லாத அமெரிக்காவும் பிரிட்டனும், கவலை காட்டுகின்றன என்றால், அதிலே, களங்கம் இல்லை என்று கூறமுடியும்?

'சீட்டோ'வில், லாவோஸ், கம்போடியா, வியட்நாம் என்ற மூன்று நாடுகளும் மறைமுகமாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன!

இந்தோ-சீனப் போர் நிறுத்த ஒப்பந்தப்படி, இந்த மூன்று நாடுகளும், எந்தவித மான இராணுவக் கூட்டு ஒப்பந்தத்திலும் சேர்க்கக் கூடாது என்பது நிபந்தனை!

இப்போது, அமெரிக்க ஏகாதிபத்தியம், அந்த ஒப்பந்தத்தைக் காலில் போட்டு மிதிப்பதுபோல், 'சீட்டோ'வில், அந்த மூன்று நாடுகளையும் சேர்த்துவிட்டிருக்கிறது!

அத்துடன், அண்மையில் அமெரிக்காவின் விளையாட்டுப் பொம்மையாகத் தன்னை அமைப்படுத்திக் கொண்ட பாகிஸ்தான், இந்த ஒப்பந்தத்தில் கையெழுத்திட்டிருக்கிறது!

இந்தியாவை மிரட்ட 'சீட்டோ' பயன்படும், என்று பாகிஸ்தான் நம்புகிறதுபோல தெரிகிறது!

தென் கிழக்கு ஆசியாவுக்கென ஏற்படுத்தப்பட்டிருக்கும் இந்த ஒப்பந்தத்தில், ஆசியாவின் மிகப் பெரிய நாடான இந்திய உபகண்டமோ, இலங்கையோ, பர்மாவோ சேரவில்லை!

ஆனால், தென் கிழக்கு ஆசியாவின் அமைதி பற்றி எங்கேயோ வாழும் அமெரிக்காவுக்கும், கடல் போக்கிலே கருத்தை இழந்துவிட்ட பிரிட்டனுக்கும் அக்கறை ஏற்பட்டுவிட்டது என்பது ஆச்சரியமான செய்திதான்!

ஐரோப்பிய நாடுகளை, அமெரிக்கா, சோவியத் யூனியனைக் காட்டிப் பயமுறுத்துகிறது!

ஆசிய நாடுகளை, சீனாவைக் காட்டி மிரட்டுகிறது!

அண்மையில், செஞ்சீனா சென்றுவந்த தோழர் அட்லி, சீன நாடு, தனது மக்களின் மீது அதிகக் கவனம் செலுத்துகிறது என்றும், அதன்மீது மேற்கத்திய நாடுகளுக்குப் பயம் வேண்டியதில்லை என்றும் பேசியிருக்கிறார்.

அமெரிக்காவும், அதன் பின்னேயும் நாடுகளும், 'சமாதானம், பாதுகாப்பு,' என்ற போர்வையில், ஆசியாவின் அமைதிக்கு உலை வைக்க முயற்சிக்கின்றன! உலக நெருக்கடியை மீண்டும் ஏற்படுத்தியிருக்கின்றன!

நியூயார்க்கிலே, சுதந்திர தேசத்து சில அமைச்சர் சீமான்கள், மணிலாவில் ஆசிய நாடுகளின் எதிர்காலத்தை நாசமாக்கத் திட்டமிட்டு—'அது நாணயமான திட்டம்; நாசத்தைத் தடுக்கும் அமைப்பு'—என்றும், 'ஐ.நா. சபையின் அரசியலுக்கு உட்பட்டது'—என்றும், பிரச்சாரம் செய்கிறார்கள்!

ஆசை வலை வீசி, ஆதிக்க முறை நிலைநாட்டும் அமெரிக்காவின் ஆசைக எண்ணத்தை ஆசிய மக்கள் உணர்ந்திருக்கிறார்கள்!

'காடி வருகிறது' என்று பயம் காட்டி, புலிக் குகைக்குள் அழைத்துச் செல்ல அமெரிக்கர்கள் எண்ணுகிறார்கள் என்பதை, ஆசிய நாடுகள் உணர்ந்துவிட்டன!

ஆசிய நாடுகள், அமெரிக்க ஏகாதிபத்தியத்திடமிருந்து தக்க பாடம் கற்கும் காலம் அதிக தூரத்தில் இல்லை என்பதும் நிச்சயம்!

# உலகம் போகின்ற போக்கு!

## வளரும் இலக்கியம்!

மன்னனின் வெற்றிகள், மகேசனின் பெருமை, பக்தியின் உயர்வு, பத்து அவதாரங்களின் திருவிளையாடல்கள்—இவைகளைப் பற்றித்தான் நமது நாட்டில் கதைகள், கவிதைகள், நாடகங்கள், திரைப் படங்கள் எழுதப்பட்டன. பத்து ஆண்டுகளுக்கு முன்பு வரையிலே, நமது நாட்டின் இலக்கிய எழுத்தாளர்கள் எனப்படுவோர், மக்களை மடமையில் வாழச் செய்யும் வழி முறைகளைப் பற்றியே தங்கள் கருத்தினைச் செலுத்தினார்கள். ஏழையின் வாழ்வு பற்றியோ, சமூகத்தின் முன்னேற்றம் பற்றியோ அவர்கள் கவலைப்பட்டார்கள் இல்லை.

நிலைமை இப்போது மாறிவிட்டது. பகுத்தறிவு இயக்கத்தினர், தமிழ் இலக்கியத் துறையில், மறுமலர்ச்சிக் கலையைப் புகுத்திவிட்டனர்! மகேசனின் பெருமைக்குப் பதில், மாடுபோல் மனிதன் உழைத்தும் பலன் கிட்டவில்லை என்பதையும், பக்தியின் உயர்வை விட தொழிலாளியின் உழைப்புக்கு அதிக மதிப்பு தர வேண்டுமென்பதையும், உடல் உணர்ச்சிகளுக்காக மட்டும் காதல் என்ற நிலையை மாற்றி, காதல், கலப்புத் திருமணங்களை வளர்க்கும்—சாதி பேதத்தை அழித்து சமத்துவ சமுதாயத்தை உருவாக்கும் என்பதையும், பகுத்தறிவு இயக்கத்தினர், எழுத்தும் பணியின் மூலம் வற்புறுத்தினர்!

அதுபோன்றே, பாமரனின் பெயரைச் சொல்லி, பகல் வேஷமணிந்து, பாமர மக்களின் வாழ்வைப் பலியிடும் குதுமதியாளர்கள் எவ்வெந்த உருவிலே நாட்டில் உலவுகின்றனர் என்பதையும் எடுத்துக் காட்டி வருகின்றனர்!

ஆனால், இன்றும் வடநாட்டிலிருந்து வெளியாகும் கதைகள், திரைப் படங்களில் பெரும்பாலானவை காதலைப் பற்றியும், மாளிகைவாசிகளின் வாழ்க்கையைப் பற்றியுமே சித்தரிக்கின்றன! அங்கே, இலக்கியம், வளருவதாகக் காணோம்!

ஆனால், நமது நாட்டிலே வளரும் மறுமலர்ச்சி இலக்கியம், திராவிடத்தின் அடுத்த பகுதியான கன்னடத்தில் நல்ல பாதையை நோக்கிச் செல்கிறது! சமீபத்தில், கன்னட மொழியில், 'ஜாதாரிய ஜெகத் குரு' என்ற பெயரில், புத்தகம் ஒன்று வெளியாகியிருக்கிறது.

ஏமாற்றிப் பிழைக்கும் எத்தன் ஒருவன், பக்தனாகி, பாமரனின் சிஷ்யன்போல நடித்து, ஊர் மக்களைச் சுரண்டி வாழ்கிறான்; மடம் ஒன்று அமைத்து அங்கே 'திருவிளையாடல்'கள் புரிகிறான்; இருபது ஆண்டுகளாகக் குழந்தையின்றி வருந்தும் பெண் ஒருவளைத் தன் இச்சைக்குப் பலியிடுகிறான்; பின்னர், மக்கள், இவனை, யார் என்று தெரிந்து கொள்ளுகிறார்கள்; மடத்தின் சொத்துக்களைச் சூறையாடியதாக அந்தப் பகல் வேடதாரி, போலீசாரின் பிடியில் அகப்படுகிறான்!—இதுதான் அப்புத்தகத்தின் மூலக்கதை;

இதுபோன்று, நாட்டிலே நீண்டகாலமாக நடைபெறும் கொடுமைகளைப் பின்னணியாக வைத்து, கன்னடமொழியில், இனம் மறுமலர்ச்சி எழுத்தாளர்கள் பலர் கதை எழுதுகிறார்கள் என்று தெரிகிறது.

பயமின்றி, பாராட்டும் காட்டாது, சமூகத்தின் காணப்படும் குறைபாடுகள், சுரண்டல் முறைகள், உயர்ந்தோர் எனப்படுவோர் இழைக்கும் கொடுமைகள், இன்னபிறவற்றை அந்த எழுத்தாளர்கள் வெளிப்படுத்துகின்றனராம்!

மக்களின் அறியாமையை, தங்களின் சுய

(4-ம் பக்கம் பார்க்க)

# தூத்துக்குடி சதி வழக்கு விசாரணை

## சாமிகுளத்துவய்யர், ராஜலட்சுமி, சோமசுந்தரி சாட்சியம்

திருநெல்வேலி, செப். 3—

தூத்துக்குடி சதி வழக்கின் தொடர் விசாரணை இன்று மீண்டும் நெல்லை அடிஷனல் செஷன்ஸ் நீதிபதி திரு. ராதாகிருஷ்ண முதலியார் முன்னிலையில் ஆரம்பமாயிற்று.

64-வது சாட்சியாக விசாரிக்கப்பட்ட சாமி குளத்துவய்யர், பப்ளிக் பிராசிக்யூட்டர் கேள்விகளுக்குப் பதிலளிக்கையில் கூறியதாவது :—

"நான், புதுக்கிராமத்தில் வசித்து வருகிறேன்; என் வீட்டிற்கு முன்னால் காம்பவுண்டு சுவரும், கதவும் உண்டு; முகப்பில் திறந்த வராந்தாவும், அடுத்து இரும்புக் கம்பி வலையால் தடுக்கப்பட்ட உள் வராந்தாவும், நடையும் உண்டு; வராந்தாவில் இரு கதவுகளும் வலைபடிக்கப்பட்டு உள்பக்கம் பூட்டு, இரும்புப் பட்டைகள் முதலியவையும் உண்டு; நடையை அடுத்து ஹால்கள், சாப்பாட்டு அறை, சமயலறை, பின்னர் புழக்கடை முதலியவும் உண்டு; சென்ற வருடம் ஜூலை மாதம் 15-ந் தேதி காலையில் நான் வீட்டிலிருந்தேன்; என் மகன் ராமகிருஷ்ணய்யர் இந்தியன் பாங்கியில் வேலை பார்ப்பவர்; சாப்பிட்டு விட்டுச் சென்றுவிட்டார்; எனக்கும் பாங்கியில் கொஞ்சம் வேலையிருந்ததால், சாப்பிட்டுவிட்டுப் போகுமுன், நடையில் பத்திரிகை படித்துக் கொண்டிருக்கையில் சுமார் 15 பேர்கள் கம்புகளை எடுத்துக்கொண்டு, சர்க்காருக்கு விரோதமான கோஷங்கள் செய்துகொண்டு வந்தனர்; பின்னர், நான் சாப்பிட்டுவிட்டு வெளியே போகுமுன் என் பேத்தி ராஜலட்சுமியையும், சோமசுந்தரி அம்மாளையும், வீட்டை பத்திரமாய்ப் பார்த்துக் கொள்ளும்படி சொன்னேன்; பிரசவத்திற்காக ராஜலட்சுமி என் வீட்டிற்கு வந்திருந்தாள்; சம்பவம் நடக்கும்போது அவளுக்குக் குழந்தை பிறந்து சுமார் 40 தினங்கள் இருக்கும், என்னுடைய தாயாதியான சோமசுந்தரியம்மாள், அன்றைய தினம் வீட்டு வேலையைச் செய்ய உதவியாக வந்திருந்தார்; நான் பாங்கிற்குப் போக டவுன் பஸ்ஸில் ஏறி கொஞ்சதூரம் சென்றதும், பஸ் நின்றுவிட்டது; ஒரு கூட்டத்தினர், பஸ்ஸில் யாராவது பிராமணர்கள் பிரயாணம் செய்தால் இறங்கிவிட வேண்டுமென்று கூறினர்; பஸ் டிரைவரும், கண்டக்டரும் கூட்டத்தினரைச் சமாதானப்படுத்தி, பஸ்ஸை ஷெட்டுக்குக் கொண்டு போய் விட்டனர். நான், அருகிலுள்ள ஒரு நண்பரின் வீட்டிலிருந்து, என் வீட்டுக்குப் பக்கத்து வீட்டிலிருந்த ராமசாமி சாஸ்திரி வீட்டிற்கு டெலிபோன் செய்து, என் வீட்டில் சாமான்கள் சேதமடைந்ததாகத் தெரிந்து கொண்டு வீட்டிற்கு வந்தேன்; பேத்தியும், சோமசுந்தரியம்மாளும் நடந்தவைகளைச் சொன்னார்கள்; கண்ணாடி, படங்கள், கடியாரம் முதலிய சாமான் சேதமடைந்து கிடந்ததைக் கண்டேன்; மேஜையின் மேல் வைத்துவிட்டுப் போன எனது மூக்குக் கண்ணாடியைக் காணவில்லை; பின்னர் என் பேத்தியின் உதவியால் போலீசாருக்கு ஒரு புகார் எழுதி அன்று இரவு போலீஸ் சப் இன்ஸ்பெக்டர் என்னை விசாரிக்கும்போது அவரிடம் கொடுத்தேன்."

குறுக்கு விசாரணையின்போது அவர் கூறியதாவது :—

"நான் பல வருடங்கள் தூத்துக்குடியில் ஒரு பிரபல நாடார் வக்கீலிடம் கூட்டாகவிருந்தேன்; சிவில், கிரிமினல் வழக்குகளில் எனக்கு அனுபவம் உண்டு; 3-வது எதிரி தங்கப்பழத்தை ஏற்கனவே ஐந்து அல்லது ஆறு வருடங்களாக எனக்குத் தெரியும்."

பின்னர் ராஜலட்சுமி சாட்சியாக விசாரிக்கப்பட்டார். அவர் தமது சாட்சியத்தில் கூறியதாவது :—

"சாமிகுளத்து அய்யர் சாப்பிட்டுவிட்டு வெளியில் சென்றதும், நான், வாயில் கதவைத் தாழ்ப்பாள் போட்டுக் கொண்டு உள்ளே இருந்தேன்; குழந்தை உள் ஹாலில், தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தது; சோமசுந்தரியம்மாள் சமையலறையில் வேலையாயிருந்தார்; சிறிது நேரம் கழித்து வாசல் பக்கம் சத்தம் கேட்கவே, பார்த்ததில், சுமார் 15 பேர் வீட்டினுள் புக முயற்சிப்பதைப் பார்த்தேன்; வராந்தாவில் உள்ள வலைக் கம்பியைக் கிழித்து, தாழ்ப்பாளைத் திறந்து அவர்கள் நடையில் நுழைந்தனர்; நான், பயந்து போய், குழந்தை இருந்த ஹாலில் போனேன்; கூட்டத்தினர், படங்கள், கண்ணாடி, கடிகாரம் முதலியவைகளை சேதப்படுத்தினர்; என்னை நோக்கி இருவர் வருவதைப் பார்த்தேன்; ஒருவரிடம் அரிவாளும், மற்றொரு நபரிடம் கம்புமிருந்தது; அரிவாள் வைத்திருந்த நபர் என்னை சுவற்றில் மோதி, அரிவாளைக் காட்டிப் பயமுறுத்தினார்; நான் கூச்சல் போடவே சோமசுந்தரியம்மாள் உள்ளிருந்து, ஓடிவந்து என்னை கட்டிப் பிடித்துக் கொண்டார்; கம்பு வைத்திருந்த நபர் அந்த அம்மாளின் முதுகிலும், கையிலும் பலதடவை அடிக்கவே, அவர் என்னை விட்டுப் பின்புறம் ஓடிவிட்டார்; அரிவாள் வைத்திருந்த நபர் என் கழுத்திலிருந்த சங்கிலியைப் பிடித்திழுத்தார்; சங்கிலி அறுந்து, அதில் இருந்த இரு திருமாங்கல்யங்களும், தங்கக் குண்டுகளும், சங்கிலியுடன் கையில் வந்துவிட்டது; பிறகு, அந்த நபர், தொட்டிலருகில் சென்று, கொசு வலையை நீக்கிவிட்டு, குழந்தையை வெட்டுகிறதுபோல் அரிவாளை உயர்த்தவே, நான், 'குழந்தையை வெட்டுகிறான்,' என்று கூச்சல் போட்டேன்; அப்போது பின்புறமிருந்து வந்து, நடையின் பக்கமிருந்த இரண்டாவது நபர், 'அருணாசலம், வெளியே வா; குழந்தையை விட்டுவிடு,' என்று சொல்லவே, அந்த நபர், அங்கிருந்து சென்று, பின்னர், மற்றவர்களுடன் வெளியில் சென்றுவிட்டார்; பின்னர், சோமசுந்தரி, கம்பு வைத்திருந்தவர் தன்னுடைய ஒரு வளையலையும், தங்கச் சங்கிலியையும் பிடுங்கிக்கொண்டு போய்விட்டதாக என்னிடம் சொன்னார்; நடையின் பக்கமிருந்து என் அறுந்த சங்கிலியையும், மூன்று தங்கக் குண்டையும் எடுத்தேன்; இரு திருமாங்கல்யங்களும், ஒரு குண்டும் காணவில்லை; பிறகு எனது தாத்தா சாமி குளத்து அய்யர் வந்ததும், நானும், சோமசுந்தரியம்மாளும் நடந்தவற்றைச் சொன்னோம்; அவரது சொற்படி ஒரு புகார் எழுதினோம்."

சாட்சி, 50-வது எதிரி அருணாசலத்தை அடையாளம் காட்டி, அந்த நபர்தான் தன்னை அரிவாளால் பயமுறுத்தி, தங்கச் சங்கிலியைப் பறித்ததாகவும், அதே நபர்தான் குழந்தையை நோக்கி அரிவாளை ஓங்கியதாகவும் கூறினார்.

குறுக்கு விசாரணையின்போது ராஜலட்சுமி கூறியதாவது :—

"கூட்டத்தில் எவரும் கருப்புச் சட்டையணிந்திருந்ததாக எனக்கு நினைவில்லை; அறுந்த சங்கிலியையும், மூன்று தங்க குண்டையும் நான் தாத்தாவிடம் கொடுத்துவிட்டேன்; என் வீட்டின் மாடி உண்டு; மாடியில், அப்போது யாருமில்லை; பிராமணர்களை எதிர்த்துக் கோஷம் செய்பவர்களை கருப்புச் சட்டைக்காரர்கள் என்று நான் எண்ணினேன்."

✱

அடுத்தபடியாக சோமசுந்தரியம்மாள் சாட்சியமளிக்கையில் கூறியதாவது :—

"நான், சாமிகுளத்து அய்யருக்கு தாயாதி; அவர் வீட்டு சமையல்காரப் பெண் வீட்டிற்கு விலக்காயிருந்தபடியால், சம்பவ தினத்தன்று காலையில் உதவி செய்ய வந்தேன்; சாமிகுளத்து அய்யர் சாப்பிட்டுவிட்டு வெளியில் சென்றுவிட்டார்; குழந்தை தொட்டிலில் தூங்கிக் கொண்டிருந்தது; ராஜலட்சுமி ஹாலில் இருந்தார்; நான், சமையலறையில் இருந்தேன்; ராஜலட்சுமியின் கூச்சல் கேட்டவுடன் ஹாலில் வந்து எட்டிப் பார்க்கையில், ராஜலட்சுமியை கையில் அரிவாளுடன் இருந்த நபர் சுவற்றுடன் அமுக்கிப் பிடித்துக்கொண்டிருந்தார்; அருகில் மற்றொரு நபர் கம்புடன் நின்று கொண்டிருந்தார்; நான் ஓடிப்போய் ராஜலட்சுமியை கட்டிக்கொண்டேன்; என்னை தோளிலும், மணிக்கட்டிலும் கம்பு வைத்திருந்த நபர் அடித்ததால் ராஜலட்சுமியை விட்டுப் பின்புறம் ஓடி, என் கையிலிருந்த இரண்டு ஜோடி தங்க வளையல்களில் மூன்றைக் கழற்றி அங்கிருந்த தென்னை மரத்தின் கீழ் எறிந்து விட்டு, மற்றொரு வளையலையும் கழற்றும்போது கம்பு வைத்திருந்த நபர் வந்து அந்த வளையலையும், சங்கிலியையும் பறித்தார்; சங்கிலியில் முக்கால் பாகம் அறுந்துவிட்டது; அறுந்த சங்கிலியையும், ஒரு வளையலையும் எடுத்துக்கொண்டு அந்த நபர் முன்பக்கம் சென்றார்; அப்போது ராஜலட்சுமி, 'குழந்தையை வெட்டுகிறானே,' என்று கூச்சல் போட்டதைக் கேட்டு உள்ளே போனேன்; தொட்டிலருகில் அரிவாளுடன் இருந்த நபர், கொசு வலையை ஒதுக்கிக் கொண்டு இருந்ததைப் பார்த்தேன்; அப்போது முன்பக்கம் கம்புடன் இருந்த நபர், அருணாசலம், வெளியே வா; குழந்தையை விட்டு விடு, என்று சொல்லவே, அந்த நபர் அங்கிருந்து சென்று, மற்றவர்களுடன் வெளியே சென்று விட்டார்."

குறுக்கு விசாரணையின்போது, கூறியதாவது:—

"குழந்தையின் மேல் நகைகள் இருந்ததாவென்று தெரியாது; வீட்டில் இரும்புப்பெட்டி இருந்ததும் தெரியாது; சாமிகுளத்து அய்யர் வந்தவுடன், நானும் ராஜலட்சுமியும் நடந்தவைகளைச் சொன்னோம்."

# 'வாசகால பர்மிட்'டுகளை நீடிக்க முடியாதாம்!

## 70,000 பேர் வெளியேற்றப்படுவர்!

### இலங்கைப் பிரதமரின் பேச்சு

கொழும்பு, செப் 9—

"தற்போதுள்ள குடியேற்றச் சட்டப்படி, 5 ஆண்டுகளுக்கு இலங்கையில் வசிக்க அனுமதி தரப்படுகிறது; ஒவ்வொரு 5 ஆண்டு முடிவிலும், அனுமதி புதுப்பித்துத் தரப்படும் என்றும், தங்கள் வாழ்நாள் முழுதும் இலங்கையிலேயே கழிக்கக்கூடும் என்றும் பலர் நினைக்கிறார்கள்.

5 ஆண்டிற்கு ஒருமுறை அந்த அனுமதியை கட்டாயமாகப் புதுப்பிக்கத்தான் வேண்டுமென்பதில்லை. கடந்த ஜனவரியில், பண்டித நேருவை டில்லியில் சந்தித்தபோது, 'இனி, இம்மாதிரி, இந்தியர்களுக்குத் தரப்பட்டுள்ள குடியிருக்கும் அனுமதியைப் புதுப்பிக்கப் போவதில்லை,' என்பதைத் தெளிவாகச் சொல்லியிருக்கிறேன்; அதன்படி அனுமதிக் காலம் முடிந்ததும் இந்தியர்கள் இலங்கையை விட்டு வெளியேறியே தீரவேண்டும்; இதை இந்தியா ஆட்சேபித்தால், இப்போதுள்ள குடியேற்றச் சட்டங்களை எங்களுக்குச் சாதகமான வகையில் திருத்திக் கொள்ளுவோம், என்றும் நேருவிடம் வெகு தெளிவாகச் சொல்லி இருக்கிறேன்; அவரும் இந்த விஷயத்தை ஒத்துக் கொண்டிருக்கிறார்.

"எனவே, ஒவ்வொரு இந்தியரையும் பரிசீலித்து, 'அவர் இலங்கையில் இருக்கவேண்டியது எமக்குத் தேவைதானா?' என்று ஆராய்ந்து, அவர்கள் எல்லாம் இலங்கையை விட்டு வெளியேறுமுன், அவர்கள், தங்கள் சொத்துக்களை விற்றுக் கொள்ள ஒரு குறிப்பிட்ட காலம் அனுமதித்து, அவர்கள் இலங்கையிலிருந்து வெளியேறத் தயாராக இருக்குமாறு செய்ய வேண்டும்; சிலருக்கு ஆறு மாதம், இன்னும் சிலருக்கு ஒரு வருடம் இப்படி போகத் தவணை தந்து அவர்களை வெளியேற்ற வேண்டும்,"

என்று, இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை, இலங்கை மக்கள் சபையில் பேசுகையில் குறிப்பிட்டார்.

இலங்கையில் தற்காலிக வாசக பர்மிட்கள் வைத்திருக்கும் இந்தியர்கள் சுமார் 70,000 பேர் எனலாம்.

# இரு நாடுகளிடையே உறவு முறிகிறது!

## இலங்கை கூடிப் பேச விரும்புகிறது

கொழும்பு, செப். 8—

இந்தியா, இலங்கை ஆகிய இரு நாடுகளுக்குமிடையே இருந்துவந்துள்ள உறவு சிறிது சிறிதாக சீர்குலைந்து வருவது கண்டு இருநாட்டு சர்க்காரும் கவலை கொள்கின்றனராம்; எனவே, இந்தியா, இலங்கைப் பிரச்சினைகள் குறித்து, வருகிற வாரத்தில் கொழும்பில், இரு சர்க்காரும் கூடி விவாதிக்க ஏற்பாடுகள் நடந்து வருவதாக நிச்சயமாய் தெரிகிறது என்று அறிவிக்கப்படுகிறது.

இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை தலைமையில் நடைபெறும் இந்த மாநாடு, அவரது இல்லத்திலோ, செனட்டில் உள்ள அவரது காரியாலயத்திலோ நடைபெறக்கூடும் என்றும் இந்த மாநாட்டில் இந்திய அரசியல் தூதர் சி. சி. தேசாயும், இரு சர்க்கார் அதிகாரிகளும் கலந்து கொள்வர் எனத் தெரிகிறது.

இந்திய அரசாங்க சார்பில் உயர்தர அதிகாரிகள் யாரேனும் புதுடில்லியிலிருந்து வந்து கலந்து கொள்வார்களா என்பது இன்னும் தெரியவில்லை. இலங்கையைப் பொறுத்தமட்டில் முதன் மந்திரியுடன் வெளிநாட்டிலாகா காரியதரிசியும், இன்னும், நிதி, கைத்தொழில், வர்த்தக இலாக்கா மந்திரிகளும் கலந்துகொள்கின்றனர் என்று தெரிகின்றது.

# வெள்ளக் கட்டுப்பாடு

## திட்டம் தயாரிக்க மத்திய போர்டு

இந்திய அரசாங்கம் வெள்ளக் கட்டுப்பாட்டிற்கான விரிவான திட்டம் ஒன்றை தயாரிக்க மத்திய போர்டு ஒன்றை ஏற்படுத்தியுள்ளார்களாம்.

கிடைக்கக்கூடிய பணம், தொழில் நுட்பமறிந்த நிபுணர்கள் இவற்றைக் கவனித்து வெள்ளக் கட்டுப்பாட்டுக்கான திட்டங்களை அந்த 'போர்டு' தயாரிக்குமாம்.

வெள்ளத்தால் அடிக்கடி பாதிக்கப்படும் பிரதேசங்களில், வெள்ளக் 'கண்ட்ரோல் போர்டு'களை நியமிக்கும்படி, சம்பந்தப்பட்ட ராஜ்ய அரசாங்கங்கள் கேட்டுக் கொள்ளப்பட்டிருக்கின்றன.

மத்திய போர்டு, ராஜ்ய போர்டுகள் தயாரிக்கும் திட்டங்களை, வேலைத் திட்டங்கள் பரிசீலனையின்போது, ஆராய்வார்கள்.

மத்திய போர்டின் தலைவராக மத்திய சர்க்காரின் நீர்ப்பாசன — சக்தி — பிளானிங் ஆகிய இலாக்கா மந்திரி நியமிக்கப்பட்டிருக்கிறார்.

அந்த போர்டின் அங்கத்தினர்களாக, மத்திய நிதி மந்திரி உட்பட பலர் நியமிக்கப்பட்டிருக்கின்றனர்.

இந்தப் போர்டின் கடமைகளாவன :—

வெள்ளக் கட்டுப்பாட்டிற்கான விரிவானதொரு திட்டம் தயாரித்தல், வெள்ளக் கட்டுப்பாடு சம்பந்தமான முறைகளைப் பரிசீலித்து முடிவெடுத்தல், ராஜ்யங்களில் வெள்ளக் கட்டுப்பாட்டிற்காக மேற்கொள்ளும் நடவடிக்கைகளை ஆராய்ந்து அங்கீகரித்தல், வெள்ளக் கட்டுப்பாட்டு வேலைகளுக்கு வேண்டிய உதவிக்கு ஏற்பாடு செய்தல் ஆகியவை ஆகும்.

## பம்பாயில் நடிகர்கள் ஊர்வலம்

### வெள்ளத்தால் வாடும் மக்களுக்கு நிதி திரட்ட ஏற்பாடு

பம்பாய் நகரின் முக்கியதெருக்களில், ஒரு மைல் நீளத்திற்கு திரைப்பட நடிகர்கள், நடிகைகள் அனைவரும் செப். 15-ந்தேதியன்று ஊர்வலமாகச் செல்வார்கள் என்று தெரிகிறது.

ஊர்வலத்தின் இருமருங்கிலும் 800-க்கு மேற்பட்ட தொண்டர்கள் உண்டிப் பெட்டிகளை ஏந்திச் செல்வார்களாம்.

இவர்களுக்குப் பின்னே மோட்டார் ஒன்றில் அமர்ந்துகொண்டு சில நடிகர்கள், 'உதவி தாருங்கள்; உண்டியலை நிரப்புங்கள்,' என்று வேண்டுகோள் விடுப்பர்.

இந்தப் பணம் பீகார், வங்கம், அசாம் ஆகிய பகுதிகளில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்டவர்களுக்கு அனுப்பப்படும்.

இதுவரை அவர்கள் சினிமா நடிகர்கள் கழகச் சார்பில் இரண்டாயிரம் ரூபாய் திரட்டியுள்ளனர் என்று தெரிகிறது.

